1968 பிப்ரவரி 28]

திரு. சு. துரைசாமி: நகரமைப்பு இயக்குநர் அங்கீகாரம் பெருமலே செல்வாக்குள்ளவர்கள் நிலங்களை தங்கள் சொந்த விருப்பப்படி விற்பதால் தான் பொதுமக்களுக்குப் பயன்படக்கூடிய சாலைகள் அடைத்து வைக்கப்பட்டிருக்கின்றன. இந்தச் சாலைகளை மக்கள் வரிப் பணத்திலிருந்து வாங்காமல் நகரமைப்பு விதிமுறைப்படி விரைவில் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: நகரமைப்புத் திட்டத்தை விரைவுபடுத்த தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. உறுப்பினர் அவர்கள் சொல்கிற குறைகள் கவனிக்கப்படும்.

Dr. H. V. HANDE: What are the exact details of the representation that has been made ?

The Hon. Thiru S. J. SADIQ PASHA: The residents of Ramnagar have represented that the four roads in Ramnagar have been planned to connect the Perumanallur Road and Avanashi Road that the first three streets have been blocked by 'thatties' resulting in stagnation of drain water which will cause spreading of several diseases. They have stated that they have to go to Avanashi Road and Railway station to reach Perumanallur Road and that the Commissioner hesitates to take action against the person concerned as he is related to the Chairman of the Municipal Council.

திரு. சு. துரைசாமி: அந்த இடத்துச் சொந்தக்காரர் நகர மன்ற அங்கத்தினராகவும், நகரத்தில் செல்வாக்குள்ளவராகவும், முன்னால், இங்கிருந்த அரசாங்கத்தில் இருந்த ஒரு அமைச்சரின் உறவினராகவும் இருந்த காரணத்தினால்தான் இந்த நடைமுறைகள் எல்லாம் மீறப்பட்டு அவர்கள் தங்கள் சொந்த விருப்பப்படி சாலைகளை அடைத்து வைத்திருக்கிறார்கள். இது நீண்ட காலமாக இருக்கிறது. ஆகவே அந்தச் சாலைகளை, அடைக்கப்பட்ட இடங்களை விரைவில் அப்புறப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: அங்கத்தினர் அவர்கள் சொல்வது போன்று ஒரு புகார் இருந்து வருகிறது. அதுபற்றி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

பஞ்சாயத்துச் சீரமைப்பு

* 99 வினா—**திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பஞ்சாயத்து சீரமைப்புச் சம்பந்தமாக அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

(இ) திரு. முருகேச முதலியார் அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளில் எவைகளை அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: (அ) and (இ) திரு. முருகேச முதலியார் தமது அறிக்கையில் செய்துள்ள பல பரிவுரைகளையும் அரசு ஆராய்ந்து வருகிறது. இவை குறித்து முடிவு எடுக்கப்படும். இதுவரை எவ்வித முடிவும் எடுக்கப்படவில்லை.

திரு. என். எஸ். வி. சித்தன்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியங்களில் பலருக்கு வேலையிழப்பு ஏற்படலாம் என்ற எண்ணம் இருக்கிறது. குறிப்பாக சமூகப் பணியாளர்களாக வேலை செய்யும் அரசியல் தியாகிகளுக்கு வேலையிழப்பு ஏற்படலாம் என்ற எண்ணம் இருக்கிறது. இதனைப் போக்க ஊராட்சி ஒன்றியங்களில் வேலை பார்ப்பவர்கள் மு.ப. 11-30

எந்தத் துறையினராக இருந்தாலும் அவர்களுக்கு வேலையிழப்பு ஏற்படாது என்ற உறுதியை அரசு அளிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : ஏற்கெனவே இந்த மாமன்றத்தில் விளக்கங்கள் தரப்பட்டிருக்கின்றன. அப்படிப்பட்ட சஞ்சலங்கள் ஏற்பட்டிருப்பதாக எனக்குத் தகவல் இல்லை. புதிய கேள்விகள் மூலமாக அப்படிப்பட்ட சஞ்சலங்களை உருவாக்க வேண்டாமென்று கனம் உறுப்பினரவர்களைக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

திரு. செஞ்சி வெ. முனுசாமி : தலைவரவர்களே, முந்தைய அரசு தன்னுடைய கட்சிக்கு வேண்டியவர்களை "சோஷியல் ஒர்க்கர்"களாக நியமித்திருக்கிறார்கள். அதனால் எந்தவித நன்மையும் இல்லை. பொது மக்கள் பணம் தான் வீணாகிறது. எனவே அந்த உத்தியோகத்தை நீக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : எல்லாவற்றையும் அரசு ஆராய்ந்து கொண்டிருக்கிறது. எல்லாவற்றையும் ஆராய்ந்து முடிவெடுக்கும்.

டாக்டர். எச். வி. ஹாண்டே : சார், அமைச்சரவர்கள் எல்லாக் கருத்துக்களும் ஆராய்ச்சியில் இருக்கின்றன என்று சொன்னார்கள். திரு. முருகேச முதலியார் ரிப்போர்ட்டிலுள்ள ரெக்கமென்டேஷன்களில் முக்கியமான 3, 4 அம்சங்களைப்பற்றி இந்த மன்றத்தில் விளக்குவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : திரு. முருகேச முதலியார் அறிக்கை எல்லாக் கட்சித் தலைவர்களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதில் இரகசியக் குறிப்பு ஒன்றுமில்லை. சுதந்திராக் கட்சிக்கும் அந்த அறிக்கை கொடுக்கப்பட்டிருக்கிறது. அதைப் படித்துப் பார்த்தாலே புரிந்துகொள்ளலாம் என்று கனம் உறுப்பினரவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திரு. பெ. மலைச்சாமி : தலைவரவர்களே, ஊராட்சித் தலைவர்களையும், ஊராட்சி ஒன்றியப்புத் தலைவர்களையும் மக்களே நேரடியாகத் தேர்ந்தெடுக்கும் முக்கியமான காரியத்தை அரசு மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : எல்லாவற்றையும் ஆராய்ந்து பார்த்து முடிவெடுக்க வேண்டியவற்றில் இதுவும் ஒன்று.

Thiru K. VINAYAKAM : Sir, whereas this Report has been circulated only among the leaders of Parties inside the House and whereasMembers are at a loss to know what exactly are the recommendations contained in that Report, will the Government take this House into their confidence and distribute copies of the Report to the individual Members and also will the Government assure us that if any legislation has to be brought forward, it would be brought forward atleast before the next elections to the Local Bodies ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : கட்சியின் தலைவர்களுக்குக் கொடுப்பதே மற்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் கூறி அதைப் பற்றி ஆராய்ந்து தங்கள் கட்சிகளைக் கூட்டி இந்தப் பரிவுரைகளின்மீது தங்கள் கருத்துக்களைச் சொல்ல வேண்டுமென்றுதான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டபடி அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. ஆனால் அந்தக் கட்சியின் தலைவர் உறுப்பினர்களுக்குக கொடுக்காமல் இருக்கிறார்கள் என்ற விஷயம் இப்பொழுதுதான் என் கவனத்திற்கு வந்திருக்கிறது. எல்லோருக்கும் கொடுப்பது பற்றி யோசித்துத் தேவையானால் அளிக்கப்படும்.

திரு. க. இராமமூர்த்தி : தலைவரவர்களே, இந்தப் பஞ்சாயத்துப் பெருமன்றத்தைச் சீரமைக்கும் நேரத்தில், இவற்றில் அனுவசியமான உள்ள வேலைகளை ஒழிப்பதற்கோ, நீக்குவதற்கோ அரசாங்கம் நடவடிக்கை எடுக்கிறதா ? அவ்வாறு எடுப்பதால் அந்த வேலைகளில் இருப்பவர்கள் தாஙகள் எந்த விதத்தில் பாதிக்கப்படுவோமோ என்று ஐயுறுகிருர்கள். எனவே அவர்களுக்கு மாற்று வேலை தரும் அடிப்படையில் அந்த மாற்றத்தை அரசாங்கம் செய்யுமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அனுவசிய வேலை எது என்பது முடிவாகவில்லை. அப்படி முடிவாகி நடவடிக்கை எடுக்கும் சமயத்தில் வேலை இழப்பவர்களுக்குச் சாத்தியமான எல்லா உதவிகளையும் செய்ய அரசாங்கம் தேவையான நடவடிக்கைகளை எடுக்கும்.

திரு ஏ. ஆர். சுப்பையா முதலியார் : சார், காலதாமதம் ஏற்படுவதால் பல தப்பபிப்பிராயங்கள் உலாவுகின்றன. ஆகையால் ஒரு கால வரம்பை நிர்ணயம் செய்து அரசாங்கம் முடிவெடுக்க முன்வருமா ? என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : பல்வேறு அரசியல் கட்சிகளின் கருத்துக்களும் கேட்கப்பட்டிருக்கின்றன. மாவட்ட ஆட்சித் தலைவர்களின் கருத்துக்களையும் கேட்டிருக்கிறது அகில இந்திய ரீதியில், சமுதாய வளர்ச்சி அமைச்சரையும், மாநிலங்களின் முதலமைச்சர்களையும் கொண்ட ஒரு மாநாடு கூட்டி டிசம்பர் 29, 30-தேதிகளில் கருத்துக்களை விவாதிக்க மைய அரசு ஒரு ஏற்பாட்டை மேற்கொண்டிருந்தது. மைய அரசு எதிர் பாராமல் அந்த மாநாட்டைத் தள்ளி வைத்து விட்டது. மீண்டும் கூட்டுமென்று எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம். அப்படி இல்லையென்றால் மாநில அரசு ஆராய்ந்து முடிவெடுக்கும்.

திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் : சார், இதுபற்றி மத்திய அரசின் யோசனையையும் கேட்கப்பட்டிருக்கிறது என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். இது மாநில அரசாங்கத்தைப் பற்றியுள்ள ஒரு நிர்வாகப் பொறுப்பு. ஒவ்வொரு மாநிலத்திலும் பஞ்சாயத்து யூனியன்களின் அமைப்புகள் வேறு வேறு விதமாக இருக்கிறது திரு. முருகேச முதலியார் அவர்களின் அறிக்கையும் கேட்டு பரிசிலனையும் நடந்தாகிவிட்டது. மாதக் கணக்கில் தாண்டிக்கொண்டிருக்கிறது. இதனுல் என்ன ஆகுமோ என்ற அச்சம் ஏற்பட்டிருக்கிறது. நான் பஞ்சாயத்து யூனியன் தலைவராகவும் இருக்கிறேன். அதிகாரிகளிடத்திலும் இந்த அச்சம் இருக்கிறது. இதைப் போக்க அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என்று அறிய ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : இது மத்திய அரசோடு தொடர்புடையது என்று சொல்லவில்லை. மத்திய அரசாங்கம் ஒதுக்க வேண்டிய வளர்ச்சி நிதிகளைப் பற்றி முடிவு செய்ய அந்த மாநாட்டைக் கூட்ட ஏற்பாடு செய்யப்பட்டது. ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள அலுவலர்களிடையே எந்தவித பய உணர்ச்சியும் இருப்பதாகத் தெரியவில்லை. நான் பல்வேறு இடங்களுக்குச் சென்றபோது அவர்கள் உற்சாகத்தோடு பணியாற்றுவதைப் பார்த்தேன். ஊராட்சி ஒன்றியத் தலைவர்களுக்கு அந்த அச்சம் ஏற்பட வேண்டியதில்லை. அரசாங்கம் பரிசீலித்து தேவையான நேரத்தில் தேவையான முடிவுகளை நிச்சயம் எடுக்கும்.

திரு. ஆர். கருப்பையா : தலைவரவர்களே, தமிழகத்தில் ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்களில் பெரும்பாலானவர்கள் அரசாங்க வசூல் வேலைகளையே பெரும்பாலும் கவனித்து வருகிருர்கள். கோட்டாட்சித் தலைவர் தாசில்தார், ரெவின்யூ இன்ஸ்பெக்டர் செய்ய வேண்டிய அந்தப் பொறுப்பை ஊராட்சித் தலைவரோ அல்லது ஆணையாளரோ செய்து விவசாயிகளிடம் கண்டிப்பாக இருந்து கடன்கள் போன்றவற்றை அவர்கள் வாங்கும்பொழுது பிடித்துக்கொள்கிருர்கள். அந்த ஆணையாளர்களுக்கு இது போன்ற காரியங்களைக் கொடுக்காமல் இருக்க அரசு முன்வருமா என்று அறிய ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: அரசாங்கம் கடன் வசூலிப்பது சமுதாய வளர்ச்சித் திட்டங்கள், காரியங்கள் ஆகியவற்றிற்குப் பயன்படுத்துவதற்கும் சேர்த்துத் தான். ஆகவே எல்லோருடைய ஒத்துழைப்பும் தேவை என்ற முறையில் அவர்கள் பங்கை அவர்கள் செய்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்பு

ஒத்திவைப்புத் தீர்மானங்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இப்பொழுது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் கோவையில் தேசியக் கொடி எரிக்கப்பட்டதைக் குறித்தும், திரு. சுரேந்திரன் அவர்கள் லாரி கவிழ்ந்து இரண்டு பேர் உயிர் இழந்ததைக் குறித்தும், டாக்டர் ஹாண்டே அவர்கள், அண்ணாமலைப் பல்கலைக்கழக நிகழ்ச்சிகளைக் குறித்தும் இங்கே மூன்று ஒத்தி வைப்புத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறார்கள். இந்த நாள் நிதிநிலை அறிக்கையை அளிப்பதற்காக என்று ஆளுநர் அவர்கள் வரையறுத்துக் கொடுத்திருக்கும் நாள். ஆகவே இன்று வேறு எந்த நிகழ்ச்சியும் எடுத்துக் கொள்ளக் கூடாது என்று விதிமுறை இருப்பதைக் கருதி நான் இந்தத் தீர்மானங்களுக்கு முடிவு அளிக்க இயலாத நிலையில், அவற்றை நாளைய தினம் எடுத்துக்கொள்வதாக இருக்கிறேன். ஏற்கனவே, முன்பு இங்கிருந்த பேரவைத் தலைவர்கள்

"Motion that the meeting be adjourned cannot be moved during the "Budget session" as the days have been specifically allotted by his Excellency the Governor for the Budget"

என்று கூறியிருக்கிறார்கள். ஆகவே, அவற்றை நாளை எடுத்துக்கொள்கிறேன்.

அடுத்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பிப்பார்கள்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS